# வெ. ஸ்ரீராம்




''இதற்கு நான் தகுதியானவன் தானா'' என்று எனக்குத் தெரியவில்லை, என்று அடக்கத்துடன் கூறுகிறார் வெங்கடகிருஷ்ணன் ஸ்ரீராம்.

அடுத்த சில நிமிடங்களுக்கு இந்த சுவாரஸ்யமான மனிதரைப் பற்றிப் படியுங்கள்.அதற்குப் பிறகு புரியும் கலை மற்றும் கலாசாரத்திற்கான இந்த வருட 'சாம்பியன் ஆஃப் சென்னை' விருதிற்கு, அவர் மிகவும் தகுதியானவர் என்று நாங்கள் ஏன் கருதுகிறோம் என்று.

**எங்கு தொடங்கியது?- ஒரு பாட்டிக்குக் கூற வேண்டும் நன்றி**

'இந்தியத் தன்மை'யை மிகவும் போற்றிக் கொண்டாடிய தனது பாட்டியின் தீவிரமான பாதிப்பில், தில்லியில் வளர்ந்தார் ஸ்ரீராம். கர்னாடக இசையை தனது 6ஆவது வயது முதல் 15ஆவது வயது வரை முறையாகப் பயின்ற  ஸ்ரீராம், அந்தக் கலையில் தனது மனதைப் பறிகொடுத்ததோடு அல்லாமல், அதில் நிரம்ப ஞானம் பெற்று, இன்னும் நிறைய கற்க வேண்டும் என்ற பேரவாவுடன் வளர்ந்தார். இந்த சிறப்பு குணமே, உலகெங்கும் உள்ள கர்னாடக இசை ரசிகர்கள் பயன்பெறும் வகையில் பல அரிய செயல்களில் அவர் ஈடுபடுவதற்குத் தூண்டுகோலாக அமைந்தது.



பாட்டு வாத்தியார்களிடம் இசை கற்றதாலும், பாட்டியிடம் சுலோகங்கள் பல கற்றதாலும், பள்ளி நாடகங்களில் நடித்ததாலும், சில வேளைகளில் நாடக உரையாடல்களில் தடுமாறியதாலும், எப்பொழுதும் மற்றவர்களது கண்களை நேரடியாகப் பார்த்துப் பேச கண்டிப்பான பாட்டியிடம் கற்றதாலும், 15 வயது ஆனபோதே மேடை நாடக உலகின் அனுபவங்களை தாம் என்றுமே விட முடியாது எனவும், இந்த அனுபவங்கள் தந்த பாடங்களைப் பின்பற்றி அடுத்த கட்டத்திற்குச் செல்ல வேண்டும் என்றும் புரிந்து கொண்டார். இதற்கு நாம் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

அவரது பெற்றோர்கள், அவர் இசைக் கலைஞராகவோ அல்லது பத்திரிகையாளராகவோ ஆகி விடுவார் என பயந்து அவரைப் பொறியியல் படிப்பு படிக்கச் செய்தாலும், அந்த இரண்டு துறைகளின் பாதிப்பு நிறையவே அவரிடம் இருந்தது. தங்களுடன் நேரத்தைக் கழிக்காமல், கல்லூரி முடிந்ததும் மாலை நேரங்களில் அவர் கர்னாடக இசைக் கச்சேரிகளுக்குச் சென்று வருவதை நம்ப முடியாமல், அது என்ன என்று புரிந்து கொள்ளாமல், அவரது சக மாணவர்கள் விழித்தனர்.

கர்னாடக சங்கீதம் மீதிருந்த பேராவல், சென்னைக்கு வந்தவுடன், பீறிட்டுக் கிளம்பிய வெள்ளமாய் பிரவாகம் எடுத்து ஓடியது.

**கல்கத்தாவின் நஷ்டம், சென்னையின் லாபம்**

1993ஆம் ஆண்டு, திருமணமான சில மாதங்களுக்குள் தனது மனைவி சாரதாவுடன் சென்னை வந்த ஸ்ரீராம், தனது மாமனார் நடத்தி வந்த 'நீர் ஆய்வுத்துறை' (Hydraulics) சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபட்டார். ஸ்ரீராமின் பேராவலை நன்கு புரிந்து கொண்ட மாமனார், அவரைத் தொழிலதிபர் என்ற ஒரு பரிணாமத்தில் மட்டுமே பார்க்க விரும்பாது, அவரைப் பலவாறு ஊக்குவித்து, அவர் சென்னையில் தொடர்ந்து இருக்க முக்கிய காரணமானார்.

2009ஆம் ஆண்டு ஸ்ரீராமின் உடல் நிலை பாதிக்கப்பட்டபொழுது கலை மற்றும் கலாசாரம் சம்பந்தமான நடவடிக்கைகளை சிறிது குறைத்துக் கொள்ளலாம் என அவர் யோசித்துக் கொண்டிருந்தபொழுது, அவரை அவ்வாறு செய்யாமல் இருக்க வற்புறுத்தி, அவரது நேரத்தை எடுத்துக் கொள்ளும் பிற விஷயங்களுக்கும், இவற்றுக்கும் இடையே சரியீட்டைக் (Balance) கண்டுகொள்ளும்படி அவரை வற்புறுத்தினார்.

தாம் விரும்பும் செயல்களைச் செய்வதற்குத் தமது 'குழு' வின் ஆதரவு தான் காரணம் என்று கூறும் ஸ்ரீராம், அந்த வகையில் தாம் மிகவும் அதிர்ஷ்டசாலி என நம்புகிறார்.

**சென்னை வந்த பிறகு கலைத்துறையில் பதித்த சுவடுகள்**

1997ஆம் ஆண்டு, பலருடன் சேர்ந்து இணையதள வடிவமைக்கும் தொழிலைத் தொடங்கினார் ஸ்ரீராம். இந்த சந்தர்ப்பத்தில்தான், அவரும் அவரது மனைவி சாரதாவும் சஞ்சய் சுப்ரமணியத்தின் இசையால் பெரிதும் கவரப்பட்டிருந்தனர். அவருடைய நேரடியான அறிமுகம் இல்லாவிட்டாலும், அவரது கச்சேரிகளுக்குத் தவறாமல் சென்று ரசித்து வந்தனர்.

ஒருமுறை மிகுந்த தயக்கத்துடன் சஞ்சய் தொலைபேசியில் உரையாடினார் ஸ்ரீராம். ''எனக்குக் கூச்ச சுபாவம் அதிகம், என் மனைவி சாரதாவைப் போல் அல்ல.அவர் மிகுந்த தைரியசாலி, என்கிறார் ஸ்ரீராம். நிறைய முறை கச்சேரிகளில் அவர்களைப் பார்த்திருந்ததால், உற்சாகமாகப் பேசிய சஞ்சய், நேரடி சந்திப்பிற்கு உடனே சம்மதித்தார். இந்த சந்திப்பில் பிறந்த இரு குடும்பக்களுக்கிடையேயான நட்பு, பன்மடங்காக வளர்ந்து இன்றுவரை தொடர்கிறது.

சந்திப்பின் பொழுது, தனக்கென பிரத்தியேக இணையதளம் வேண்டாம், பொதுவாகக் கர்னாடக இசைக்காக இருக்கட்டும் சஞ்சய் கூற, பிறந்தது www.sangeetham.com. 1998 முதல் 2005 வரை நடத்தப்பட்ட இந்த இணையதளத்தில், கர்னாடக இசை பற்றிய வாராந்திர கட்டுரைகள், இசைக்கலைஞர்கள் பற்றிய குறிப்புகள், கருத்துப் பரிமாற்றங்கள் என நிறைய விஷயங்கள் இருந்தன. தொடங்கப்பட்ட 6 மாதங்களில், ஸ்ரீராமே தனியாக இதை நடத்த, 2000ஆம் ஆண்டு வாக்கில், இந்த இணையதளத்திற்குக் கணிசமான வாசகர்கள் சேர்ந்தார்கள். எனினும், வாசகர்களுக்கு இன்னும் நிறையவே தேவைப்பட்டது. வாசகர்களில் பலரும் சென்னைவாசிகள் அல்ல. டிசம்பர் இசை விழாவின்பொழுது மட்டும் சென்னைக்கு வருபவர்கள். அம்மாதிரி வரும் சந்தர்ப்பங்களில், அவர்கள் ஸ்ரீராமை சந்திக்க விரும்பினர். வெறும் சாதாரணமான சந்திப்பாக அது இல்லாமல், பல பிரபலமான இசைக்கலைஞர்கள் வாழ்ந்த, புழங்கிய இடங்களைச் சுற்றி வரவும், அவர்களைப் பற்றிய சுவாரஸ்யமான தகவல்களைப் பேசவும் வகை செய்யும் 'பாரம்பரிய உலாவரவு' (Heritage Walk) நிகழ்த்தலாமே என்று ஸ்ரீராமுக்குத் தோன்றியது.

இந்த உலாவரவை சரியாக நிகழ்த்த பல செய்திகள் ஸ்ரீராமுக்குத் தேவைப்பட்டதால், வரைபடக் கலைஞரும், தனிப்பெற்ற சிறப்பு வாய்ந்த இசைக்கலைஞரும், வீணை பாலசந்தரின் சகோதரருமாகிய திரு.எஸ்.ராஜத்தை அணுகினார்.

முப்பதுகளில் இருந்த ஸ்ரீராம், எண்பதுகளில் இருந்த ராஜத்தைத் தனது குருவாகக் கொண்டு, அவர் குடியிருந்த மயிலாப்பூர் நடுத்தெருவிற்குச் சென்றார். கொட்டும் மழையினையும் பொருட்படுத்தாத திரு.ராஜமும், இவரும், ஸ்ரீ 420 எனும் ஹிந்தித் திரைப்படத்தில் வரும் ராஜ்கபூர், நர்கீஸ் போல ஒரே குடையில் மாட வீதிகளில் சுற்றினார்கள். சுமார் ஒன்றரை மணி நேரம் நிகழ்ந்த அந்த உலாவின் இறுதியில் ஸ்ரீராமுக்குத் தேவையான எல்லா விஷயங்களும் கிடைத்தன.

ராம்நாராயணின் ஆதரவுடன், 'சென்னை ஆன் லைன்' காலைச் சிற்றுண்டி வழங்க, சஞ்சய்யும் கலந்து கொள்ள, முசிரி சுப்ரமணிய ஐய்யரின் வீடு திறக்கப்பட்டு, அவர் வாங்கிய பதக்கங்களைக் கண்டதுடன் இனிதே தொடங்கியது 'பாரம்பரிய உலாவரவு'. ஒரு நல்ல பாரம்பரியம் தொட்ங்கப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற இந்த உலாவரவு, ஜார்ஜ் டவுன், திருவல்லிக்கேணி என்று சென்னை மாநகரத்தின் பல இடங்களைச் சுற்றியதோடல்லாமல், தஞ்சாவூர், திருவையாறு என சென்னைக்கு வெளியேயும் தொடர்ந்தது.இடையே சுனாமியின் பாதிப்பினால் ஓரிரு வருடங்கள் நின்ற இந்த உலாவரவு, பின்னர் தொடர்ந்து நடைபெற, சங்கீதம் டாட்காம் மெதுவாக மங்கலானது.

தென்னிந்திய பாரம்பரிய விரிவுரை தொடர்கள் (South Indian Heritage Lecture Series) நடத்தி வந்த 'டாக் மைய்யம்' (Tag Centre) திரு.சாரி, 2003ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஸ்ரீராமிடம், பாபனாசம் சிவன் பற்றிய விரிவுரை நிகழ்த்துமாறு கோர, அது பலராலும் வரவேற்கப்பட்டது. அன்று அந்த விரிவுரையினைக் கேட்ட இருவர், ஸ்ரீராமின் எதிர்காலத்தில் பெரிதும் பங்கு வகித்தார்கள். ஒருவர் - வரலாற்றாசிரியரும் 'மெட்ராஸ் ம்யூசிங்க்ஸ்' ஐ சேர்ந்தவரும் ஆன திரு. முத்தையா. மற்றொருவர் 'ஈஸ்ட் வெஸ்ட் புக்ஸ்' ஐ சார்ந்த திரு. பத்மனாபன்.

**சந்தர்ப்பங்களின் சங்கிலி**

முத்தையா, சங்கீதம் டாட் காமில் ஸ்ரீராமின் கட்டுரைகளைப் படித்து வந்தாலும், 'சுருதி' பத்திரிக்கையுடனான ஸ்ரீராமின் தொடர்பு தான் அவரை வெகுவாகக் கவர்ந்தது. ஸ்ரீராம், சுருதியில் எழுதிய கட்டுரைகள் மிகவும் ஆழம் மிகுந்தவை. ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட சொற்கள் இருந்த அந்தக் கட்டுரைகள், சரித்திரப் பிண்ணனியோடு இருந்தன. சுருதி பத்திரிக்கையின் அப்பொழுதைய ஆசிரியர், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியான திரு.

கே.வி. ராமனாதன். ஸ்ரீராமிற்குப் பலவகைகளிலும் வழிகாட்டியாக அவர் இருந்தார். இந்தக் கட்டுரைகள்-குறிப்பாக அவற்றின் சரித்திரப் பிண்ணனி - முத்தையாவை வெகுவாக ஈர்க்க, 'மெட்ராஸ் ம்யூசிக்ஸ்' இல் எழுதுமாறு ஸ்ரீராமை அழைத்தார். சின்னச் சின்ன கட்டுரைகள்தான் முதலில் எழுத ஆரம்பித்தார் ஸ்ரீராம். 2008ஆம் ஆண்டு 'மெட்ராஸ் ம்யூசிங்க்ஸ்' இன் நிர்வாகக் குழுவில் ஸ்ரீராமைச் சேருமாறு முத்தையா அழைப்பு விடுக்க, 'மெட்ராஸ் ம்யூசிங்க்ஸ் மனிதர்' (Madras Musings Man & MMM) என ஸ்ரீராம் அழைக்கப்படும் அளவிற்கு இந்தத் தொடர்பு வளர்ந்து வலுத்தது.

திரு. ராம் நாராயணும், திருமதி.கௌரி ராம் நாராயணும், 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழின் திருமதி. சுசீலா ராம்நாத்திடம் ஸ்ரீராமை அறிமுகப்படுத்த, கர்னாடக இசை பற்றியும், இசைக் கலைஞர்களின் வேடிக்கையான சில நடவடிக்கைகள், பழக்கவழக்கங்கள் பற்றி நகைச்சுவையுடன் எழுதிய ஸ்ரீராமின் கட்டுரைகள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையன்றும் வெளிவந்து பலரது ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றது.

பிறகு, 'தி ஹிந்து' பத்திரிக்கையும் இவரை எழுதுமாறு அழைக்க, வியப்புக்குறிய விஷயமாக இது தென்பட்டாலும், ஒரே சமயத்தில், 'தி ஹிந்து' விலும் 'இந்தியன் எக்ஸ்ப்ரஸ்' இலும் இவரது கட்டுரைகள் வெளி வந்தன. எனினும், இப்பொழுது 'தி ஹிந்து' வில் மட்டுமே இவர் எழுதி வருகிறார். பழைய பதிப்புகளில் வெளிவந்த இசை சம்பந்தமான கட்டுரைகளை ஆய்ந்து கருத்து சொல்லும் ஒரு பத்தியாக (Column) ஒவ்வொரு மாதமும் ஒரு வெள்ளிக்கிழமை மட்டும் 'ஆன்கோர்' (Encore) என்ற பெயரில் வந்தன இவரது எழுத்துகள். தற்பொழுது, சத்குரு. தியாகராஜர் பற்றிய இரண்டு வருடத் தொடர் ஒன்றை 'தி ஹிந்து' வில் எழுதி வருகிறார்.

முத்தையாவின் யோசனையின் பேரில், சென்ற நூற்றாண்டில் தம்மை மிகவும் கவர்ந்த கர்னாடக இசைக் கலைஞர்கள் பற்றிய ஒரு 22 அத்தியாயங்கள் நிறைந்த ஒரு புத்தகத்தை எழுதுமாறு பத்மனாபன் இவரைக் கேட்டார். தனது மாமாவின் அளப்பறியா பொக்கிஷமாகிய பல இசைக்கலைஞர்களின் இசைத் தொகுப்புகளைக் கேட்டு வளர்ந்த ஸ்ரீராமின் மனதில் 'இசைக் கதாநாயகர்களும்', 'இசைக் கதாநாயகிகளும்' அவதாரமெடுத்திருந்ததால், 'கர்னாடிக் சம்மர்' என்னும் புத்தகம் 2004ஆம் ஆண்டு இலகுவாக வெளிவந்தது. இதற்குப் பிறகு, தனியாகவும், பிறருடன் கூட்டு சேர்ந்தும், இவர் எழுதிய புத்தகங்கள் பல வெளிவந்தன:

1. 'தி தேவதாசி அண்ட் தி செய்ன்ட்' - லைஃப் அண்ட் டைம்ஸ் அஃப் பெங்களூர் நாகரத்தினம்மாள் (2007)
2. செம்மங்குடி ஸ்ரீனிவாச அய்யர், லைஃப் அண்ட் ம்யூசிக் (2008)
3. ஹிஸ்டாரிக் ரெசிடன்சஸ் ஆஃப் சென்னை (2008)
4. ஃபோர்ஸ்கோர் அண்ட் மோர் - தி ஹிஸ்டரி ஆஃப் ம்யூசிக் அகாடமி, மெட்ராஸ் (2009 - மாலதி ரங்கஸ்வாமியுடன்)
5. சாம்பியனிங் என்டெர்ப்ரைசஸ் - 175 இயர்ஸ் ஆஃப் மெட்ராஸ் சேம்பர் ஆஃப் காமர்ஸ் அண்ட் இண்டஸ்ட்ரீ, கருமுத்து சென்டர் (2012)
6. ப்ரிக் பை ப்ரிக் - தி வித்யா மந்திர் ஸ்டோரி (2016, கார்த்திக் பட் உடன்).

சென்னை ம்யூசிக் அகாடமியின் வரலாற்றை எழுதி, பின்னர் அதன் செயற்குழு உறுப்பினராகவும் ஆன இவர், நுண்கலைகளைகளை வளர்ப்பதில், 90 வருடங்களுக்கும் மேலாக இந்த நிறுவனம் ஆற்றும் மகத்தான சேவையை மனமாகப் பாராட்டுகிறார். 90 வருடங்களாக இருக்கும் ஆவணங்களை எண்ணியலாக்கிய (Digitise) இந்த நிறுவனம் இவரைப் பொறுத்தவரை இசையைப் பதிவு செய்து விற்கும் ஒரு சபா மற்றுமல்ல; இசை, நாட்டிய ஆராய்ச்சியினை செய்து வரும் ஒரு மாபெரும் நிறுவனம்.
1859ஆம் வருடம் வெளிவந்த கர்னாடக இசை பற்றிய முதலாவது புத்தகம் உட்பட, சுமார் 7000 புத்தகங்களைத் தன்னுள்ளே அடக்கியிருக்கும் 'ம்யூசிக் அகாடமி' யின் நூலகத்திற்கு புத்துயிர் அளித்ததில் இவர் பெரும்பங்கு வகித்தார். இன்னும். 1900 ஆம் ஆண்டிற்கு முன்னால் வெளிவந்த 150 புத்தகங்களும், பெயர்ப் பட்டியல் வரிசையும் (Catalogue), எண்ணியலாக்கப்பட்டு, வலைத்தளத்தில் ஏறுவதற்குத் தயாரான நிலயில் உள்ளன. சிலரது உதவியுடன் நிறைவேற்றப்பட்ட இது, உலகெங்கும் உள்ள பலரது ஆய்வுகளுக்குப் பயன்படும். 1929ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது கூட்டத் தொடரிலிருந்து, சமீபத்திய கூட்டத்தொடர் வரை எடுக்கப்பட்ட புகைப்படங்களை எண்ணியலாக்கும் முயற்சியில் தற்போது இவர் ஈடுபட்டிருக்கிறார்.

**நேர நிர்வாகம்**
இவ்வளவு விஷயங்கள் அவருக்கு எவ்வாறு சாத்தியமாகிறது? தமக்குத் தேவையில்லாத சமாசாரங்களை அறவே ஒதுக்குகிறார் அவர். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், கேளிக்கைகளில் ஈடுபடுவது, தேவைக்கு அதிகமான தொலைபேசி உரையாடல்கள், நாவல்கள் படிப்பது, முதலியவை இவர் தவிர்ப்பதில் அடக்கம். இவரது நூலகத்தில், கர்னாடக இசை மற்றும் அதன் வரலாறு, சென்னை வரலாறு, தொழில் நிறுவனங்களின் வரலாறு என 4000 க்கும் அதிகமான புத்தகங்கள் காணப்படுகின்றன. இந்தப் புத்தகங்களும், இணையமும் தான் இவரது ஆய்வுக்கும், ஆராய்ச்சிக்கும் உதவுகின்றன. தவிர, இந்திய அரசின் எண்ணியலாக்கும் திட்டம் (Govt. of India's Digitisation Programme), கால்ஃபோர்னியா பல்கலைக்கழகம், சிகாகோ பல்கலைக்கழகம், கூகுல் புத்தகங்கள் - இவைகளின் மூலமாக 'அந்தக் கால மெட்ராஸ்' பற்றிய தகவல்கள், ஆயிரக்கணக்கான புத்தகங்கள் மூலமாகவும், செய்தித்தாள்கள் மூலமாகவும், கிழக்கிந்திய கம்பெனியின் கடிதங்கள் மூலமாகவும் கிடைக்கின்றன.

சென்னை நகரமே பல விஷயங்களை தனக்குள்ளே அடக்கியிருக்கிறது. முக நூலில் (Facebook) உள்ள பதினைந்தாயிரத்திற்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட 'மெட்ராஸ் வரலாறு குழுமம்' (Madras History Group) பல அரிய சுவாரஸ்யமான தகவல்களை இவருக்குத் தருகிறது.

**இன்னும் என்ன செய்யலாம்?**
சென்னையின் வரலாறு பற்றி நிறைய விழிப்புணர்வு தற்பொழுது இருந்தாலும், மாநில அரசு, இன்னும் நிறையவே செய்யலாம் என்று கருதுகிறார் ஸ்ரீராம். சென்னை வாழ் மக்கள், சென்னையின் பாரம்பரியத்தைக் காப்பதில் இன்னும் முழுமையாக தம்மை ஈடுபடுத்திக் கொள்வதில்லை எனவும், கல்லூரிகள், அரசுத்துறை இயங்கும் கட்டிடங்கள் போன்ற பாரம்பரியம் மிக்க இடங்களுக்கு சுற்றுலா பயணிகளை சிற்றுலாவில் அழைத்துச் செல்லலாம்.எனினும், அரசாங்கம் இதிலெல்லாம் அக்கறை கட்டுவதில்லை என்று கருதுகிறார் இவர்.

சேப்பாக்க மாளிகை, ராயபுரம் காவல் நிலையம், நேஷனல் காட்சியகம் போன்றவற்றை பேணியது, வருடாவருடம் 'மெட்ராஸ் வீக்' அனுசரிப்பது - போன்ற முயற்சிகள் நடைபெற்றாலும், இவையெல்லாம் போதாது என்கிறார் இவர். மற்ற மாநகரங்களுடன் ஒப்பிட்டால், சென்னையில் நமது பாரம்பரியத்தைப் பற்றிய பெருமையும் சரி, அரசாங்கத்தின் ஆதரவும் சரி, மிகவும் குறைவுதான் என வருத்தத்துடன் கூறுகிறார் இவர்.

பழைய கட்டிடங்களை வடிவமைத்தது ஆங்கிலேயர்களாக இருந்தாலும், அவற்றிக் கட்டியது நமது கொத்தனார்களும், சித்தனார்களும் தான் என்று குறிப்பிடும் இவர், அந்த தொழில்நுட்பமும், கலையும் அவர்களோடு மறைந்து விட்டதாக மனம் வருந்துகிறார்.

இந்த விஷயத்தில், அரசாங்கமும், தனியார் நிறுவனங்களும் கூட்டு சேர்ந்தால்தான், எதிர்காலம் வளமாக இருக்கும் என நம்புகிறார் இவர். இதுபோன்ற ஒரு கூட்டு முயற்சி, சென்னை பல்கலைக் கழகத்தின் பொது நிர்வாக சபை (Senate House) கட்டிடம், இதுபோன்ற ஒரு கூட்டுமுயற்சியால் காப்பாற்றப்பட்டதை குறிப்பிட்டுக் காட்டுகிறார் இவர். தனியார் நிறுவனங்கள் இதற்காக 11 கோடி ரூபாய் அளித்தன. எனினும், காப்பாற்றப்பட்ட அந்தக் கட்டிடம் இப்பொழுது மூடப்பட்டே இருக்கிறது!

**எதிர்காலம்**
தனது மக்களுக்காக நிறைய அள்ளிக் கொடுத்த தாய் சென்னை நகரம். எனினும், இப்பொழுது முதிர்ந்த தாயாக இது இருப்பதால், மக்களாகிய நாம்தான் நமது தாயைக் காப்பாற்ற ஆவன செய்ய வேண்டும் என்று கூறுகிறார் இவர். இதற்காக, எல்லோருமே சென்னையின் முன்னணி வீரர்களாக (Champions of Chennai) வேண்டும், என விரும்புகிறார் இவர். நமது பாரம்பரியத்தைப் பேணிக் காப்பதில் பல இளைஞர்களும் ஆர்வம் காட்டுவதால், எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை நிறையவே இருக்கிறது.

சென்னையின் வரலாற்றுப் பதிவாளராக, கர்னாடக இசைக் கலைஞர்கள் பற்றிய ஆய்வுகள் செய்து புத்தகங்கள் பல பதிப்பித்த ஆய்வாளராக, 'பாரம்பரிய உலாவரவை' முதலில் இங்கு அறிமுகப்படுத்திய முன்னோடியாக, சென்னையின் கலை மற்றும் கலாசாரத்திற்கு ஸ்ரீராம் ஆற்றிய, ஆற்றி வரும் பணி மகத்தானது. சந்தேகத்திற்கு இடமில்லாமல், இவர் சென்னையின் முதன்மை சார்ந்த வெற்றி வீரர்!

